<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

OS 112/2020

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 01ஆம் நாள் பி.வா.சா.1–ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. .ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வள்ளல் | வயது | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | சம்மந்தம் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | கடலூர் | | : | |

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை – (காணொளி மூலம் பதிவு செய்யப்பட்டது)**</u>

நான் பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் வள்ளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஸ்ரீராம் பைனான்ஸ் கம்பெனியில் வேலை செய்கிறேன். வழகக்கு பிராமிசரி நோட்டினை நான் இது வரை பார்த்தது இல்லை. என் அம்மா என்னுடன் இருக்கிறார். பிராமிசரி நோட்டின் தேதி எனக்குத் தெரியாது. யார் யார் சாட்சி போட்டுள்ளார்கள் என்று எனக்குத் தெரியாது. இந்த வழக்கில் வாதி தரப்பில் யார் யாரை விசாரித்துள்ளார்கள் என்று எனக்குத் தெரியாது. வாதி தரப்பு சாட்சி விசாரணையின் போது நான் வரவில்லை. யார் வந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. தற்போது யார் வாதி தரப்பு சாட்சி என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. என் தகப்பனார் விவசாயி. அவர் படிக்கவில்லை. நான் இந்த வழக்கில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனார் சிறுநீரக பாதிப்பால் இறந்துவிட்டார். ஒரு வருடத்திற்கு மேல் சிகிச்சையில் இருந்து வந்தார். பாண்டிச்சேரி அரசு மருத்துவமனையில் 4 மாதங்கள் சிகிச்சை பெற்றார்.

சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் உள்ளது. வெளிப்புற நோயாளியாக சிகிச்சை எடுத்து வந்தார். அதன் பிறகு டயாலிசிஸ் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டதால் 3 மாதம் வீட்டில் படுத்த படுக்கையில் இருந்தார். எனக்கு சொந்தமாக சொத்து உள்ளதா என்றால் கூட்டாக பூர்வீக சொத்து உள்ளது. எவ்வளவு சொத்து என்று எனக்குத் தெரியாது. என் தகப்பனாரின் சிகிச்சைக்கு பணம் நான் வேலைக்கு செல்கிறேன். கடந்த 9 வருடங்களாக வேலையில் இருக்கிறேன். தற்போது மாதம் 25 ஆயிரம் சம்பளம். 2018 ஆம் ஆண்டு சுமார் மாத சம்பளம் 16000. அருள்பிரகாசம் (எ) ஏசுதாஸ் என்பவரை எனக்குத் தெரியாது. ராதாகிருஷ்ணன் மகன் சாந்தமூர்த்தி என்பவரை எனக்குத் தெரியும். இந்த வழக்கில் சாந்த மூர்த்தி வாதி தரப்பு 2 ஆவது சாட்சியாக வாக்குமூலம் போட்டுள்ளது எனக்குத் தெரியாது. அவரை நான் மிரட்டி குறுக்கு விசாரணைக்கு வராமல் தடுத்துவிட்டேன் என்றால் நான் அவரிடம் பேசுவதே இல்லை. சாட்சி கையெழுத்து போட்ட கதிர்வேல் என்பவர் இறந்துவிட்டார் என்று தெரியுமா என்றால் அவர் யார் என்று எனக்குத் தெரியாது. எழுத்துகாரர் சக்கரவர்த்தி என்பவர் இறந்தது தெரியும். நான் சாந்தமூர்த்திக்கு பங்காளி உறவு முறை. என் தாத்தாவும் வாதியின் தாத்தாவும் சகோதரர்கள். வாதியின் பெரியப்பா தற்போது எங்கள் ஊரில் உள்ளார். அவரிடம் என் அப்பா பணம் வாங்கியுள்ளாரா என்றால் 25 ஆயிரம் பணம் வாங்கினார் அதனை திரும்ப கொடுத்துவிட்டார். எப்போது பணம் வாங்கினார் என்று தேதி எனக்குத் தெரியாது. 2018 ல் பணம் வாங்கினார். பிராமிசரி நோட்டு எழுதிகொடுத்தார். பணம் கொடுத்த பிறகு பிராமிசரி நோட்டினை திரும்ப வாங்கினாரா என்று எனக்குத் தெரியாது. பாண்டு எழுதிக்கொடுத்ததை நான் பார்க்கவில்லை. என் அப்பா உயிருடன் இருந்த போது அது பற்றி என்னிடம் சொல்லியுள்ளார்.

என் அப்பா வலது கையால் தான் தமிழில் கையெழுத்து போடுவார். என் அப்பா 30.03.2017 தேதியில் இறந்துவிட்டார். என் அப்பாவின் இறப்பிற்கு வாதி வரவில்லை. வழக்கில் தாக்கல்செய்துள்ள ஸ்டேட்மெண்ட்டில் பணம் வாங்கவில்லை என்று போட்டுள்ளேன். நான் தான் இந்த வழக்கு ஸ்டேட்மெண்டில் கையெழுத்து போட்டுள்ளேன். வழக்கு போட்ட விவரம் என் அம்மாவுக்கு தெரியும். என் அம்மாவுக்கு இந்த வழக்கு சம்பந்தமாக தெரியும். என் அம்மாவிடம் நான் இந்த வழக்கு பற்றி கேட்டேன். 25 ஆயிரம் வாங்கி கொடுத்தாகிவிட்டது என்று சொன்னார். என் தகப்பனார் பணத்தினை வாங்கிக்கொண்டு தான் பாண்டு எழுதி கொடுததார் என்றால் சரியல்ல. பாண்டில் உள்ளது என் தகப்பனாரின் கையெழுத்தா என்றால் நான் பாண்டினையும் பார்க்கவில்லை, கையெழுத்தையும் பார்க்கவில்லை. வாதியை ஏமாற்ற வேண்டும் என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு விவரம் எனக்கு தெரியாது என்பதும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பதும் சரியல்ல. அபிராமி என் தங்கை. என் தங்கை திருமணத்தின் அன்று என் தந்தை காலமானார். என் தங்கையின் திருமணத்திற்காக வாங்கிய பணம் தான் அது என்பதும் அதனை மறைத்து தற்போது இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தை உடல் ரீதியில் பாதிப்பு இருந்தாலும் நல்ல மன ரீதியில் இருந்து தான் பணம் வாங்கினார் என்றால் சரியல்ல. என் அப்பா பணம் வாங்கி கையெழுத்து போட்டது உண்மை என்பதால் தான் என் தாயார் சாட்சி சொல்ல வரவில்லை என்றால் சரியல்ல.